**இலங்பை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்கும் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

ஆணைக்குழுவின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடசச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 16) 51 ஆம் பந்தயின் பிரகாரம்,ரூபா 66.8 மில்லியன் தொகையான முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு மீளாய்வாண்டு இறுதிவரையும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களின் பயன்பாட்டுக் காலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | சகல 4 வகுதிகளின் கீழான சகல நிலையான சொத்துக்களின் செய்பாட்டுக் காலத்தை மீளாய்வு செய்பவது நடைமுறையில் சாத்தியமற்றிருந்தது. எவ்வாறாயினும் அந்த கணக்காய்வு அவதானிப்புகளை கவனத்திற்கு எடுத்து தொடர்புபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஆ) | நிதி அறிக்கையிடல் நியமம் 09 இன் 5.5 ஆம் பந்தியின் பிரகாரம், முறையான வரி மதிப்பீட்டின் அறவீட்டின் பின்னர் | நிதி அமைச்சால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2023 இல் சம்பந்தப்பட்ட கணக்குகளில் அவசியமான | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்துடன் இணங்கியொழுக |

| | | |
|---|---|---|
| அவசியமான சீராக்கல் செய்யப் பட்டிருக்காமையால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் அறவிட வேண்டிய ரூபா 252 மில்லியன் தொகையான வருடாந்த ஒழுங்குபடுத்தல் வரியின் உண்மையான பெறுமதியை பின்வரும் தாக்கங்கள் காரணமாக கணக்காய்வில் மதிப்பிட முடியாதிருந்தது.<br><br>(i) மேற்குறித்த மீதியில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்காக இலங்கை மின்சார சபையிடமிருந்து பெற வேண்டிய ரூபா 81.8 மில்லியன் தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது.<br><br>(ii) ஆணைக்குழுவின் கணக்கேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் மீளாய்வு செய்யப்பட்ட இலங்கை மின்சார சபையிடமிருந்து பெற வேண்டிய வருடாந்த ஒழுங்குபடுத்தல் வரி ரூபா 249.7 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபையின் பிரகாரம் ரூபா 125.4 மில்லியனாக இருந்ததுடன் ரூபா 124.3 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | சீராக்கல்கள் செய்யப்படும். | வேண்டியதுடன் நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற மீதிகள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்காக கிடைக்கப்பெறாத ஆவணச்சான்றுகள்

| விடயம் | தொகை | கிடைக்கப்பெறாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| பெறவேண்டிய வருடாந்த ஒழுங்குபடுத்தல் வரி | ரூபா 2.24 மில்லியன் | மீதி உறுதிப்படுத்தல் | 2022.12.31 இல் பெற வேண்டிய வருடாந்த ஒழுங்குபடுத்தல் வரி செலுத்தப்பட்டிருக்காத சகல நிறுவனங்களும் ஒழுங்குபடுத்தல் வரியை செலுத்துவதற்கு 2023 யூலை 25 இல் கடிதம் மூலம் கவனத்திற் கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெற வேண்டிய வருடாந்த ஒழுங்குபடுத்தல் வரி தொடர்பில் மீதி உறுதிப்படுத்தல்கள் பெறப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டம் | | | |
| (i) பந்தி 16 மற்றும் 17 | கைத்தொழில் தொடர்புபட்ட மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் போன்ற இலங்கையிலுள்ள உட்கட்டமைப்பு தொழில்கள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டிய போதிலும் பெற்றோலிய கூட்டுத் தாபனம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பவற்றினை கண்காணிப்பதற்கான உரிய அதிகாரச் சட்டங்கள் திருத்தப்பட்டிருந்தது. அதாவது 20 ஆண்டுகளிற்கு மேலாக பெற்றோலியம் மற்றும் நீர் போன்ற கைத்தொழில்களை ஒழுங்குபடுத்துவதற்கு தவறியிருந்தது. | ஆணைக்குழு பெற்றோலிய கைத்தொழில் தொடர்பில் சகல அவசியமான ஒழுங்குகளையும் செய்திருந்தது, ஆனால், உரிய அதிகாரச்சட்டம் கிடைக்காமையால் அந்த ஒழுங்குகளும் தாமதப்பட்டிருந்தது. நீர் சேவையை வழங்குபவர்களுடன் தொடர்புகளை கட்டியொழுப்புவதற்கு கைத்தொழிலுக்காக புறம்பாக செயற்படுவதற்காக தேவைப்பட்டது. இந்த நோக்கத்திற்காக நீர் வழங்கல் அமைச்சுடன் நெருக்கமாக வேலை செய்கின்ற அந்த சட்ட ஒழுங்குகள் தயார்படுத்துவதற்காக தேவையான பின்னணியை தயார்படுத்தல் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | பெற்றோலியம் மற்றும் நீர் ஒழுங்குபடுத்தலிற்காக உரிய சட்ட கட்டமைப்புகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) பந்தி 31 (4) | மீளாய்வாண்டின் இறுதியில் ஆணைக்குழுவால் செய்யப்பட்ட ரூபா 675 மில்லியன் தொகையான முதலீடுகளிற்காக நிதி அமைச்சின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை | நிதி அமைச்சின் அனுமதியை பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) நி.பி 261 | மீளாய்வாண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 163,760 ஆக இருந்ததுடன் வங்கி கூற்றின பிரகாரம் ரூபா 707,410 ஆக மாத்திரமே இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 7.6 மில்லியன் செலுத்த வேண்டிய செலவினங் களிற்காக 27 காசோலைகள் எழுதப்பட்டிருந்ததுடன் அவை கட்டுப்பாட்டு கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக காசுப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்காததுட ன் கையிருப்பில் வைத்திருக்கப்பட்டது. | 2022.12.31 அளவில் ஆணைக்குழுவால் செலுத்தப்பட வேண்டியிருந்த விலைப்பட்டியலின் ஒரு பகுதி ரூபா 7,648,859 ஆக உள்ளது. அந்த வழங்கப்படாத காசோலைகள் தற்காலிக கணக்கில் விடப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்களிற் கு அமைய செயற்பட வேண்டியதுடன் அட்டுறு செலவினங்கள் முன்னுரிமை அளிக்கப்பட்டு தீர்ப்பனவு செய்ய வேண்டும். |
| (ii) நி.பி 371 மற்றும் 371 (ஆ) | ரூபா 1,480 முதல் ரூபா 536,250 வரையான வீச்சில் ரூபா 6 மில்லியன் கூட்டுத் தொகையான கட்டுநிதி மீளாய்வாண்டின் போது 09 நிறைவேற்று தரமல்லாத உத்தியோகத்தர்களிற்கு 70 சந்தர்பங்களில் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் பொது ரூபா 100,000 எல்லையை விஞ்சி 28 சந்தர்ப்பங்களில் 11 நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களிற்கு ரூபா 5.2 மில்லியன் தொகையான கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. மேலும், மாதிரி கணக்காய்வு செவ்வையின் பிரகாரம் குறித்த காலத்திற்குள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காத ஆணைக்குழுவின் 7 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 3.1 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த | ந்த நோக்கத்திற்கான புதிய முறைமையை அறிமுகப்படுத்திய பின்னர் முறையான பரிசோதனையின் கீழ் உரிய புதிய முறைமை பிரகாரம் முற்பணம் றுகின்ற வேலைகள் செய்யப்படுகின்றன. | நிதிப்பிரமாணங்களிற் கு அமைய செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தரிற்கு எதிராக கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | | |
| | (iii) நி.பி 1645 | வாகன சம்பவ குறிப்பு புத்தகங்கள் நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரியாக வாகன சம்பவ குறிப்பு புத்தகங்கள் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I மற்றும் II ஆம் பந்திகள். | i) பொது திறைசேரியின் முன்னனுமதி மற்றும் தேசிய சம்பள மற்றும் ஆளணிக் குழுவின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளாமல் உத்தியோகத்தர்களிற்கு 10 வகையான படிகள் மீளாய்வாண்டின் போது ரூபா 58.9 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 12 (1) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு சம்பளம் வழங்க வேண்டிய உத்தியோகத்தரில் வீதங்களை நிலையானதாக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் அவற்றின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு பிரிவு 12(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட சகல அல்லது ஏதாவது விடயங்கள் தொடர்பில் விதிகளை உருவாக்க கூடும் என குறிப்பிடப்பட்டிருந்தது. இதன்படி ஆணைக்குழு உத்தியோகத்தர் படி கள் தொடர்பில் தேவையாக கைநூல்கள் மற்றும் வழிகாட்டல்களை தயாரித்திருந்ததுடன் ஆணைக்குழுவிற்கு சமர்பித்திருந்ததுடன் ஆணைக்குழுவினுடைய அனுமதிக்கு உட்படுத்தி கொடுப்பனவுகள் செய்யப்பட்டது. . | அதிகாரசட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தயாரிக்கப்பட்ட நிறுவனரீதியான நிர்வாகம் மற்றும் நடைமுறைக் கோவைகாக மேற்குறித்த சுற்றறிக்கை பிரகாரம் பொதுத் திறைசேரியின் அனுமதி பெறப்பட வேண்டும். |
| | | (ii) ஆணைக்குழு நிரந்தர ஊழியரிற்காக ரூபா 8 மில்லியன் கடன் எல்லை மற்றும் 15 ஆண்டுகள் திருப்பிச் செலுத்தல்களில் அமுலாக்கப்பட்டிருந்த | இந்த விடயம் தொடர்பில் ஆணைக்குழு அதிகார சட்ட ஏற்பாடுகளிற்கு அமைய ஆணைக் குழுவானது சட்ட ரீதியாக செய்யப்பட்டிருந்தது. ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட | வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன் திட்டத்திற்கா திறைசேரி அனுமதி பெறப்பட வேண்டியதுடன் ஆணைக்குழு பொது நிர்வாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வீடமைப்பு மற்றும் ஆதனக் கடனிற்காக திறைசேரி அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. இதன்படி 2020 திசெம்பர் 15 ஆந் திகதிய 15/2007(IV) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு முரணாக அரச மற்றும் தனியார் வங்கிகளிலிருந்து 20 உத்தியோகத்தர்களால் பெறப்பட்டிருந்த ரூபா 95.6 மில்லியன் கூட்டுத் தொகையான வீடமைப்பு மற்றும் ஆதனக் கடனிற்காக மீளாய்வாண்டின் போதான வட்டியாக ரூபா 3.9 மில்லியன் ஆணைக்குழுவால் மீளளிக்கப்பட்டிருந்தது | மனிதவள மற்றும் நிர்வாக கைநூலிற்கு அமைய அனுமதிக்கப்பட்ட உரிய ஆதனக் கடன்களிற்காக வட்டி தொகை மாத்திரம் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு அமைய வட்டியை மீளளிக்க வேண்டும். |
| (ஈ) | 2022 சனவரி 14 ஆந் திகதிய 1/2015(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை பிரகாரம் உத்ததியோகபூர்வ வாகனங்களிற்கு தகுதியுடைய உத்தியோகத்தர்களிற்கு செலுத்த வேண்டிய எரிபொருள் படிகளை விஞ்சி பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் போன்ற பதவிகளை கொண்டிருக்கின்ற 13 உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டின் போது அண்ணளவாக 4950 லீற்றர் எரிபொருளிற்காக ரூபா 1.7 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த விடயம் தொடர்பில் ஆணைக்குழு ஆணைக்குழு அதிகாரச்சட்ட ஏற்பாட்டிற்கமைய சட்டரீதியாக செய்யப்பட்டிரந்தது. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுலாக்கும் போது பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாட்டுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (உ) | 2015 மே 25 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி மற்றும் | ஆணைக்குழுவின் 25 உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டின் போது மாதாந்த உத்தியோக பூர்வ வாகன படியான ரூபா 60,000 செலுத்தப்பட்டிருந்ததின் | ந்த விடயம் தொடர்பில் ஆணைக்குழு ஆணைக்குழு அதிகாரச்சட்ட ஏற்பாட்டிற்கமைய சட்டரீதியாக செய்யப்பட்டிரந்தது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2016 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 1/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | விளைவால் அந்த உத்தியோகத்தர்களிற்கு ரூபா 2.7 மில்லியன் மிகையான வாகனப் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், வாகனப் படிகளை பெறுகின்ற 12 உத்தியோகத்தர்களிற்கு ஆணைக்குழுவால் ஒவ்வொரு மாதமும் ரூபா 20,000 வீதம் ரூபா 2.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2022 யூலை 06 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் 09 ஆம் இலக்க நெறிப்படுத்தல் | ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | ந்த விடயம் தொடர்பில் ஆணைக்குழு ஆணைக்குழு அதிகாரச்சட்ட ஏற்பாட்டிற்கமைய சட்டரீதியாக செய்யப்பட்டிரந்தது. | முகமைத்துவ சேவை சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகள் குழுவின் நெறிப்படுத்தல் என்பவற்றின் ஏற்பாட்டிற்கமைய செயற்பட வேண்டும். |
| (எ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.3 ஆம் பந்தி | பொது பயன்பாட்டு ஆணைக்குழுவால் பயன்படுத்திய வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட்டோ அல்லது வாகனங்களின் எரிபொரு பரீட்சிப்பு பதிவு பேணப்பட்டோ இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் இந்த வேலைகள் மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டது. | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாட்டிற்கமைய செயற்பட வேண்டும். |
| (ஏ) | 2022 சனவரி 25 ஆந் திகதிய 04/2022 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(ஆ) ஆம் பந்தி மற்றும் 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(ஆ) ஆம் பந்தி | 2014 திசெம்பர் 15 இல் ரூபா 5,750,000 ஆன கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட CAC-6509 இலக்கமுடைய மோட்டார் கார் மற்றும் PEOGEOT 408 மாதிரி 2023 பெப்ரவரி 10 இலிருந்து 2023 ஆகஸ்ட் 31 வரை 06 மாதங்களிற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் பயனற்றிருந்தது. | இது தொடர்பில் சாத்தியவனக் கற்கையை செய்வதற்கு நடவக்கை எடுக்கப்படுகின்றதுடன் இந்த காரிற்கு மேலும் செலவுகளை செய்வதற்கு பதிலாக விற்பனை செய்வது பொருத்தமானதென அறிக்கை பெறப்பட்டது. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாட்டிற்கமைய செயற்பட வேண்டும். |
| (ஐ) | **பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிதி வழிகாட்டல்கள்** | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) பந்தி 5.5.2 மற்றும் 5.5.3 | மீளாய்வாண்டில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்ளின் கணக்காய்வு மாதிரி செவ்வையின் பிரகாரம், பொறுப்புடைய உத்தியோகத்தர்களின் அனுமதி இல்லாமல் 12 சர்தர்ப்பங்களில் ரூபா 1,176,299 ஆன கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. | இந்த நோக்கத்திற்கான புதிய முறைமையை அறிமுகப்படுத்திய பின்னர் முறையான பரிசோதனையின் கீழ் உரிய புதிய முறைமை பிரகாரம் முற்பணம் றெுகின்ற வேலைகள் செய்யப்படுகின்றன. | ஆணைக்குழுவின் நிதி வழிகாட்டல் கைநூலிற்கமைய செயற்பட வேண்டும். |
| (ii) பந்தி 13.2.2 | மாதிரி கணக்காய்வு செவ்வையின் பிரகாரம், ரூபா 1,137,456 தொகையான 51 படிகள் வழங்கும் உறுதிச் சீட்டுகள் முறையான சான்றுபடுத்தல் இல்லாமல் ஆணைக்குழு உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 313,550 தொகையான 19 மேலதிக நெர படி உறுதிச்சீட்டுக்கள் அனுமதியில்லாமல் செலுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிலிருந்து சகல இடங்களிலும் சரியாக அனுமதிக்கும் உத்தியோகத்தர் மற்றும் சான்றுபடுத்தல் உத்தியோகத்தரால் முறையான கையொப்பிமிடப்பட்டது | -மேற்படி- |
| (iii) பந்தி 12.8.3 (ஆ) (iii) | கொள்வனவு முற்பணங்கள் பதவிநிலை உத்தியோகத்தரிற்கு மாத்திரம் வழங்கப்பட முடியும். எவ்வாறாயினும் அதற்கு முரணாக ரூபா 4.7 மில்லியன் கூட்டுத் தொகையான பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கலிற்கான முற்பணங்கள் 27 சந்தர்ப் பங்களில் 18 வெளித் தரப்பினருக்கு ஆணைக ்குழுவின் உத்தி யோகத்தாரல் செலுத்தப் பட்டிருந்தது. இதன்படி, வெளித் தரப்பினரால் ஆணைக்குழுவின் நிதிகளை முறையற்ற வழியில் பயன்படுத்தி இருந்தது. | இந்த முறைமை தற்போது திருத்தப் பட்டதுடன் நிறுவனங் களிற்கான காசோலைகள் முற்பணமாக பதியப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iv) பந்தி 12.8.3 (ஆ) (iv) | முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த கட்டு நிதிக்கான வேலைகள் பூர்த்தியாகி யதிலிருந்து 03 நாட்களிற்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 71 சந்தர்ப்பங்களில் 27 உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிவாரி நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 6.9 மில்லியன் தொகையாக கட்டுநிதி 12 நாட்கள் முதல் 195 நாட்கள் வரையான தாமதத்ளுடன் தீர்ப்பனவு செய்யப்பட்டது. மேலும், மீளாய்வாண்டு இறுதியில் தீர்க்கப் படாதிருந்த மிகுதி முற்பணம் ரூபா ரூபா 205,670 119 நாட்கள் முதல் 317 வரையான தாதமங்களில் அவை தீர்ப்பனவு செய்யப்பட்டன. | உரிய உத்தியோகத்தர்கள் தாமதமில்லாமல் முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு அறிவிக்கப்பட்டதுடன் உரிய உத்தியோகத்தர்கள் முற்பண தீர்ப்பனவை கடுமையாக கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அறிவிக்கப்பட்டது. | -மேற்படி- |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நேரொத'த மிகை ரூபா 109.5 மிலலியன் தொகையுடன் ஒப்பிடும் பொது ரூபா 287.6 மில்லியன் மிகையாக இருந்தது இதன்படி நிதிசார் விளைவுகளில் ரூபா 178.1 மில்லியன் ஆன முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. வருமானம் 44 சதவீதத்தால் அதிகரித்தமையும் ஆலோசனை சேவைகள் செலவினம் மற்றும் செயற்பாட்டுச் செலவினம் முறையே 41 சதவீதம் மற்றும் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தமையும் இந்த முன்னேற்றத்திற்காக பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதன வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஆணைக்குழுவின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் அதிகரிப்பு/ குறைவின் பகுப்பாய்வு கீழ் காட்டப்பட்டுள்ளது. .

| **விபரம்** | **முரண் அத்கரிப்பு / குறைவு ரூபா மில்லியன் -** | **சதவீதம் (%)** | **முரணிற்கான காரமணம்** |
|---|---|---|---|
| பல்வே பதிவுக் கட்டணம் | 70 | 29 | சுத்திகரிப்பு பொருட்களை விற்பனை செய்யும் கம்பனிகளின் விற்பனை வருமானம் அதிகரித்தமை |
| வருடாந்த ஒழுங்குபடுத்தல் | 56 | 29 | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் |

| | | | |
|---|---|---|---|
| வரி | | | பொது வருடாந்த ஒழுங்குபடுத்தல் வரி வீதங்கள் அதிகரித்திருந்தமை |
| ஏனைய வருமானம் | 75 | 295 | முதலீட்டு வருமானத்தின் அதிகரிப்பு |
| ஆலோசனை சேவைக் கட்டணம் | (11) | (41) | ஆலோசனை சேவை செலவினங்களில் வீழ்ச்சி |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| i | முன்னைய ஆண்டின் பொது தொடங்கப்பட்டிருந்த 6 கணனி முறைமைகளின் தாபிப்பு மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இது சொல்லப்பட்டவாறு செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதிவரை அதற்கு ரூபா 6.6 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. | இது 2023 யூலை மாதம் இறுதியில் பூர்த்தியாக்கப்கப்டும் என அறிவிக்கப்பட்டது. | ஒப்பந்த தாமதங்களை தவிர்ப்பதற்கு நெருக்கமாக கணக்காணிப்பு செய்யப்பட வேண்டும். |
| ii | உத்தியொகபூர்வ போக்குவரத்து, உணவு மற்றும் தங்குமிட படிகளாக ஆணைக்குழுவின் வழமையான செலவின நடைமுறையை பின்பற்றாமல் 2022 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற 79 பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களிற்காக 42 உத்தியோகத்தர்களிற்காக போக்குவரத்து, துணைநிலை மற்றும் இணைந்த படிகளாக சிறுசெலவு கட்டுநிதிமூலம் ரூபா 8.8 மில்லியன் தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | முற்பணக் கொடுப்பனவு நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட நடைமுறை பிரகாரம் செய்யப்பட்டிருந்தது. அத்தகையவாறு<br><br>அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகளிற்காக ரூபா 8,807,632 தொகை செலவழிக்கப் பட்டிருந்ததுடன் நடவடிக்கைகள் நிறுவனத்திற்கு வெளியே செய்யப்பட வேண்டியிருந்தது.<br><br>புதிய முறைமை பிரகாரம், அவசர கொடுப்பனவுகளாக இக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் தொடர்பான செலவினம் வழமையான கொடுப்பனவு நடைமுறைக்கமைய செய்யப்பட வேண்டும். |
| iii | எதிர்பார்க்கப்பட்ட சரியான செலவினத்தை மதிப்பீடு செய்யாமல் தேவையான தொகையை விஞ்சி சிறுசெலவு கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. அதனால் மிகையான பணம் அக்காலப்பகுதியில் அவருடைய கையில் வைத்திருந்த பின்னர் | தற்பொது அத்தகைய நிலைமைகளை குறைப்பதற்கு சகல நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்தது. | அதிக நெகிழ்ச்சியற்ற மற்றும் சரியான கிரய மதிப்பீடுகள் தயாரிக்க கவனம் செலுத்தப்பட வேண்டிய அதுநேரம் அவற்றினை அனுமதிக்கப்பட வேண்டும். |

தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. காணக்காய்வு மாதிரி செவ்வையின் பிரகாரம் வழங்கப்பட்ட மொத்த முற்பணத் தொகை ரூபா 2.9 மில்லியனாக இருந்தது. அதில் 4 சர்தர்ப்பங்களில் ரூபா 134,070 தொகையான முற்பணங்கள் எவ்வித நோக்கத்திற்காகவும் பயன்படுத்தாமல் காசாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.2 கொள்வனவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| i | நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 8/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம், சகல அசர நிறுவனங்களும் அவர்களுடைய நிறுவனங்களில் பொருட்கள், சேவைகள் மற்றும் ஆலோசனை சேவைகளை பெறும் நோக்கில் 2020 சனவரி 31 இற்கு முன்னர் இலத்திரோனிய கொள்வனவு முறைமையை பதியப்பட வேண்டியதுடன் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த கொள்வனவு திட்டம் ஒவ்வொரு ஆண்டிலும் திசெம்பர் 31 அளவில் இலத்திரோனிய கொள்வனவுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பதிவேற்றுவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஆணைக்குழு மீளாய்வாண்டு இறுதிவரையும் செயற்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 8/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையுடன் இணங்கி சம்பந்தப்பட்ட கடமைகளை ஆற்றுவதற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு அமைய செயற்பட வேண்டும். |
| ii | மேற்குறித்த சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம், இலத்திரோனிய கொள்வனவு நடைமுறை அமுலாக்கும் நோக்கில் பொதுமக்கள் கொள்வனவு மற்றும் கணனிகளின் பயன்பாடு பற்றிய அறிவுடன் நிறைவெற்று உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் ஆணைக்குழு இதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | சொல்லப்பட்ட சுற்றறிக்கையுடன் இணங்கியொழுகுவதற்கு அறிவிக்கப்பட்டது. | -மேற்படி- |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் மன்னேற்ற அறிக்கை பிரகாரம், 07 நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வித மன்னெற்றமும் இருக்காததுடன் 16 நடவடிக்கைகளின் முன்னேற்றம் 30 சதவீதத்திற்கும் குறைவாக இரந்தது. | இது கோவிட் நிலைமை, ரூபாவின் தளம்பல் காரணமாக இருந்தது. | உரிய நடவடிக்கைகள் இயலுமானளவு திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |